மாண்புமிகு பேரவை முன்னவர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பேரவைத் துணைத் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவை விதிகளின் 227(3)-ஆவது விதியின்கீழ் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இக்குழுவின் தலைவராக இருப்பார்.

(இ) முதலமைச்சர் திருக்கோயில் பராமரிப்பு நிதிக்கு நன்கொடை வழங்கியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு மற்றும் ஒரு மகிழ்ச்சியான செய்தி, மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய திருக்கோயில் பராமரிப்பு நிதிக்காக ஏற்கனவே பல்வேறு உறுப்பினர்கள் வழங்கிய நன்கொடைகளை அடுத்து கீழ்க்கண்ட உறுப்பினர்களும் நன்கொடை வழங்கியுள்ளார்கள்.

திரு. வே. பெரியசாமி ..	ரூபாய்	..	11,000
திருமதி ப. சரஸ்வதி ..	ரூபாய்	..	6,250
திரு. ஆ. கு. சீனிவாசன்	ரூபாய்	..	6,250
திரு. தி. சாத்தையா ..	ரூபாய்	..	6,250
டாக்டர் வெ. புருஷோத்தமன்	ரூபாய்	..	2,750

இதுவரையிலும் இதையும் சேர்த்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திருக்கோயில் பராமரிப்பு நிதிக்காக மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து வரப்பெற்ற மொத்தத் தொகை ரூ. 1,32,000 என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1–50

(ஈ) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் குறித்த விவரங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்ற பத்தாவது பேரவையின் ஐந்தாவது கூட்டத் தொடரில் பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பற்றிய விவரங்கள்.